www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் - 14
## (பொது அறிவு)

1. அணுக்கரு இணைவு நிகழ்வில் வெளிப்படும் ஆற்றல்
அ) தூய்மையானது
ஆ) தூய்மையற்றது
இ) சிறிது தூய்மையானதும், சிறிது தூய்மையற்றதுமானது
ஈ) ஏதுமில்லை

2. எக்ஸ் கதிர்களைக் கண்டறிந்த ராண்ட்ஜென் எந்த நாட்டைச் சார்ந்தவர்?
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா
இ) ஜெர்மனி ஈ) ஸ்வீடன்

3. 70,000 ஹெர்ட்ஸ்க்கு மேல் கொண்ட ஒலியலைகளை உண்டாக்குபவை
அ) நாய்கள் ஆ) குரங்குகள்
இ) வௌவால்கள் ஈ) டால்ஃபின்கள்

4. புற ஊதாக் கதிர்களின் அலைநீளம்
அ) $4000A^0$ முதல் $1000A^0$ வரை ஆ) $4000A^0$ முதல் $100A^0$ வரை
இ) $2500A^0$ முதல் $1000A^0$ வரை ஈ) $2000A^0$ முதல் $100A^0$ வரை

5. கலைடாஸ்கோப் போன்ற ஒளியியல் கருவிகளில் பயன்படும் ஆடி
அ) சமதள ஆடி ஆ) குவி ஆடி
இ) குழி ஆடி ஈ) ஏதுமில்லை

6. வேலை செய்யப்படும்போது வெப்பம் உண்டாகிறது என்ற உண்மையை முதன் முதலில் கூறியவர்கள்
அ) ஜூல் ஆ) ராம்ஃபோர்டு
இ) ராம்ஃபோர்டு மற்றும் ஜூல் ஈ) ஜேம்ஸ் ஜூல்

7. அடர்த்தியின் அலகு
அ) கி/மீ$^2$ ஆ) கி.கி/மீ$^2$
இ) கி/மீ$^3$ ஈ) கி.கி/மீ$^3$

8. அணுக்கருப் பிளவை விளக்குவது
அ) கூடு மாதிரி ஆ) குவார்க் மாதிரி
இ) போர் அணு மாதிரி ஈ) திரவத் துளி மாதிரி

9. 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே'-இந்த வரிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) விவேக சிந்தாமணி ஆ) நன்னெறி
இ) புறநானூறு ஈ) பழமொழி

10. 'நாரை விடு தூது' என்ற நூலின் ஆசிரியர்
அ) சிவப்பிரகாசர் ஆ) சத்திமுத்தப் புலவர்
இ) சிவஞான முனிவர் ஈ) ஒட்டக்கூத்தர்

11. 'மானுடம் வெல்லும்' என்ற நூலின் ஆசிரியர்
அ) நகுலன் ஆ) பிரபஞ்சன்
இ) சா.கந்தசாமி ஈ) சாரு நிவேதிதா

12. ஹைட்ரஜனின் நிறை எண்
அ) 1 ஆ) 0
இ) 2 ஈ) 4

13. கிராஃபைட்டில் பல்வேறு அடுக்குகளுக்கிடையே உள்ள பிணைப்பு விசை
அ) அயனிப் பிணைப்பு விசை ஆ) சகப்பிணைப்பு விசை
இ) ஈதல் சகப்பிணைப்பு விசை ஈ) வாண்டர்வால்ஸ் விசை

14. 15 கிராம் ஹைட்ரஜன் வாயுவில் எவ்வளவு மோல்கள் உள்ளன?
அ) 15 மோல்கள் ஆ) 7.5 மோல்கள்
இ) 1.5 மோல்கள் ஈ) 30 மோல்கள்

15. அதிவேக எதிர்மின்வாய்க் கதிர்கள் டங்ஸ்டன், காப்பர் போன்ற உலோகங்களைத் தாக்கும்போது உருவாக்கும் கதிர்கள்
அ) ஆல்ஃபா கதிர்கள் ஆ) பீட்டா கதிர்கள்
இ) காமா கதிர்கள் ஈ) எக்ஸ் கதிர்கள்

16. அணுவின் ஆர்பிட்டின் வடிவம்
அ) வட்ட வடிவம் ஆ) சதுர வடிவம்
இ) கோள வடிவம் ஈ) நீண்ட மணி வடிவம்

17. கீழ்க்கண்டவற்றில் ஒன்று கதிரியக்க வீச்சுகளை அறியப் பயன்படாதது
அ) கெய்கர் முல்லர் எண்ணி ஆ) கூலிட்ஜ் குழாய்
இ) மேகப் பெட்டகம் ஈ) குறை கடத்தி மின் சுற்றுகள்

18. எலெக்ட்ரான்கள் குறைந்த ஆற்றல் மட்டத்திலிருந்து உயர் ஆற்றல் மட்டத்திற்குக் கிளர்வுறுகின்றபொழுது ஆற்றல்
அ) உறிஞ்சப்படுகிறது
ஆ) உமிழப்படுகிறது
இ) சிறிது உறிஞ்சப்படுகிறது சிறிது உமிழப்படுகிறது
ஈ) எதுவுமில்லை

19. கண்ணாடியைப் பாதிக்கும் அமிலம்
அ) HCl ஆ) HBr
இ) HI ஈ) HF

20. காரியாப்சிஸிற்கு எடுத்துக்காட்டு
அ) நெல் ஆ) நெட்டிலிங்கம்
இ) நுணாக்கனி ஈ) அவரை

21. டினையர் என்பது
அ) ஒரு புகழ்பெற்ற டயர் கம்பெனி
ஆ) மல்பெரி இலைகளின் வேறு பெயர்
இ) பட்டின் பருமனை அளவிடப் பயன்படும் அலகு
ஈ) ஒரு புகழ்பெற்ற மோட்டார் நிறுவனம்

22. MMR தடுப்பூசி போடப்படுவது
அ) தட்டம்மை, புட்டாளம்மை, ரூபெல்லா தட்டம்மை
ஆ) தட்டம்மை, புட்டாளம்மை, ரண ஜென்னி
இ) தட்டம்மை, புட்டாளம்மை, மஞ்சள் காமாலை
ஈ) தட்டம்மை, ரணஜென்னி, மஞ்சள் காமாலை

23. கணையத்தின் வடிவம்
அ) வட்ட வடிவம் ஆ) நீள்வட்ட வடிவம்
இ) முக்கோண வடிவம் ஈ) செங்கோண முக்கோண வடிவம்

24. மலரின் முதல் வட்டம்
அ) சூலக வட்டம் ஆ) மகரந்தத்தாள் வட்டம்
இ) அல்லி வட்டம் ஈ) புல்லி வட்டம்

25. முதிர்ச்சியுற்ற தவளையின் வால் நீளம் எவ்வளவு?
அ) 0.5 செ.மீ ஆ) 1 செ.மீ
இ) 1.5 செ.மீ ஈ) வால் இல்லை

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

26. நெப்ரோலெப்பிஸ் என்பது ஒரு
அ) ஒளி விரும்பித் தாவரம்
ஆ) நிழல் விரும்பித் தாவரம்
இ) நீண்ட நாள் பொழுதுத் தாவரம்
ஈ) குறுகிய நாள் பொழுதுத் தாவரம்

27. மனிதனின் குடும்ப வகை
அ) பிரைமேட்ஸ் ஆ) ஹோமோ
இ) ஹோமினிடே ஈ) ஸேப்பியன்ஸ்

28. இந்தியப் பறவையியல் நிபுணர் 'சலீம் அலி' எழுதிய புத்தகத்தின் பெயர்
அ) இந்தியப் பறவைகள்
ஆ) இந்தியப் பறவைகள் பற்றிய வரலாறு
இ) தென்னிந்தியப் பறவைகள்
ஈ) வட இந்தியப் பறவைகள்

29. ஒரு கடையில் முதலில் 20% தள்ளுபடியும் பின்னர் 25% தள்ளுபடியும் கொடுக்கப்படுகிறது. எனில், மொத்தத் தள்ளுபடி
அ) 30% ஆ) 40%
இ) 45% ஈ) 50%

30. கீழ்க்கண்டவற்றில் எது பிரதிநிதித்துவ மதிப்பு
அ) முகடு ஆ) இடைநிலை
இ) சராசரி ஈ) மிகச்சிறிய மதிப்பு

31. முதல் ஐந்து இயல் எண்களின் முப்படிகளின் கூட்டுச்சராசரி
அ) 35 ஆ) 40
இ) 42 ஈ) 45

32. ஒரு வாகனம் முதல் 300 கி.மீ தூரத்தில் மணிக்கு 60 கி.மீ வேகத்திலும் அடுத்த 300 கி.மீ தூரத்தில் மணிக்கு 40 கி.மீ வேகத்திலும் செல்கிறது. எனில், மொத்தம் 600 கி.மீ தூரத்தில் அதன் சராசரி வேகம் எவ்வளவு?
அ) 48 ஆ) 40
இ) 35 ஈ) 32

33. ஒரு வட்ட விளக்கப் படத்தில் ரூ.50,000ஐக் குறிக்கும் பகுதியின் கோணம் $40^0$ எனில், ரூ.1,25,000ஐக் குறிக்கும் பகுதியின் கோணம் எவ்வளவு?
அ) $60^0$ ஆ) $70^0$
இ) $75^0$ ஈ) $100^0$

34. 0.008ன் கன மூலம்
அ) 2 ஆ) 0.2
இ) 0.02 ஈ) 0.002

35. ஒருவன் ஒரு எண்ணை 9ஆல் வகுக்க வேண்டும். ஆனால், தவறுதலாக 7ஆல் வகுக்க வந்த விடை, வர வேண்டியதைவிட 10 கூடுதல் எனில், அந்த எண் என்ன?
அ) 256 ஆ) 286
இ) 315 ஈ) 336

36. $A \cap B = \Phi$ என்பது எப்பொழுது உண்மையாகுமெனில்
அ) A = B
ஆ) $B \subset A$
இ) $A \subset B$
ஈ) Aக்கும் Bக்கும் பொதுவான உறுப்புகள் இல்லையெனில்

37. $\sqrt{2}$ என்பது ஒரு
அ) சிக்கல் எண் ஆ) விகிதமுறு எண்
இ) விகிதமுறா எண் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

38. ஒரு வியாபாரத்தில் A,B,C ஆகியோர் முறையே ₹5,000, ₹10,000, ₹15,000 முதலீடு செய்தனர். வருட முடிவில் அவர்கள் ஈட்டிய லாபம் ₹1,000 எனில், A பெற்ற லாபம் எவ்வளவு?
அ) ₹167 ஆ) ₹160
இ) ₹173 ஈ) ₹184

39. புலிகாட் ஏரி பறவைகள் உய்விடம் உள்ள மாவட்டம்
அ) காஞ்சிபுரம் மாவட்டம் ஆ) திருவள்ளூர்
இ) விருதுநகர் ஈ) நீலகிரி

40. ஒவ்வொரு நரம்பு செல்லிலும் உள்ள பெரிய செல் உடல் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) டென்ட்ரான் ஆ) டென்ட்ரைடு
இ) ஆக்ஸான் ஈ) சைட்டான்

41. வாழையின் தாவரவியல் பெயர்
அ) சொலேனம் டியூபரோஸம் ஆ) சக்காரம் அபிசினேரம்
இ) மியூஸா பாரடிசியாகா ஈ) மாஞ்சிஃபெரா இண்டிகா

42. மின்னணு நுண்ணோக்கிகளின் உருப்பெருக்கும் திறன்
அ) 2,000 மடங்கு முதல் 3,000 மடங்கு வரை
ஆ) 20,000 மடங்கு முதல் 30,000 மடங்கு வரை
இ) 2,00,000 மடங்கு முதல் 3,00,000 மடங்கு வரை
ஈ) 200 மடங்கு முதல் 300 மடங்கு வரை

43. செல்லுக்கு வலுவூட்டவும், செல்லுக்குள் பொருட்களைக் கடத்தவும் உதவும் செல் நுண்ணுறுப்பு
அ) பிளாஸ்மா படலம் ஆ) எண்டோபிளாச வலைப்பின்னல்
இ) கோல்கை உறுப்புகள் ஈ) லைசோசோம்

44. காளானின் வளர்தளத்தில் மைசீலியம் வளர்ந்த பிறகு, களிமண் அல்லது சாண உரத்தினைக் கலப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) கேஸிங் ஆ) ஸ்பான்னிங்
இ) ஹைமீனியம் ஈ) ஆனுலஸ்

45. பாரமீசியத்தின் உடலை மூடியுள்ள மெல்லிய சவ்விற்குப் பெயர்
அ) சைட்டோபேஜ் ஆ) பெரிஸ்டோமியஸ்
இ) ட்ரைகோசிஸ்டு ஈ) பெல்லிக்கிள்

46. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவர்
அ) சீனிவாசப் பிள்ளை ஆ) அனந்தாச்சார்லு
இ) டி.எம்.நாயர் ஈ) லெட்சுமி நரசு ரெட்டி

47. தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திருத்தம் செய்த ஆண்டு
அ) 2001 ஆ) 2004
இ) 2005 ஈ) 2006

48. உழவர் சந்தை திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழக முதல்வர்
அ) எம்.ஜி.ஆர். ஆ) மு.கருணாநிதி
இ) ஜெயலலிதா ஈ) சி.என்.அண்ணாதுரை

49. ரத்தினகிரி மலை உள்ள மாவட்டம்
அ) நாமக்கல் ஆ) ஈரோடு
இ) வேலூர் ஈ) திருநெல்வேலி

50. கும்பகோணம் சூரியனார் கோயிலைக் கட்டிய அரசன்
அ) ராஜராஜ சோழன் ஆ) ராஜேந்திர சோழன்
இ) முதலாம் நரசிம்மவர்மன் ஈ) முதலாம் குலோத்துங்கன்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

51. ஆல் இந்தியா இன்ஸ்டிட்யூட் ஸ்பீச் அண்ட் ஹியரிங் எங்குள்ளது?
அ) மைசூர் ஆ) சென்னை
இ) புனே ஈ) மும்பை

52. அமெரிக்காவின் துணை அதிபர்
அ) ஜான் மெக்கைன் ஆ) ஜோபிடனே
இ) சாரா பாலின் ஈ) ஹிலாரி கிளிண்டன்

53. இந்தியாவில் புதிய பண்ணை முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1833 ஆ) 1845
இ) 1850 ஈ) 1858

54. ராஜாராம் மோகன்ராய் யாருடன் இணைந்து கல்கத்தாவில் இந்துக் கல்லூரியை நிறுவினார்?
அ) வில்லியம் பெண்டிங் ஆ) தேவேந்திரநாத் தாகூர்
இ) டேவிட் ஹேர் ஈ) ஹென்றி விவியன் டொரோசியா

55. ராம்சே மெக்டொனால்டின் வகுப்புக் கொடையை எதிர்த்து மகாத்மா காந்தி எந்த இடத்தில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்?
அ) சபர்மதி ஆசிரமம் ஆ) டெல்லி
இ) எரவாடா சிறை ஈ) கல்கத்தா

56. 'உடோபியா' என்ற நூலின் ஆசிரியர்
அ) சர் தாமஸ் மூர் ஆ) சாசர்
இ) மாக்கியவல்லி ஈ) பொக்காஷியோ

57. அச்சு இயந்திரத்தைக் கண்டறிந்தவர்
அ) எராஸ்மஸ் ஆ) வில்லியம் காக்ஸ்டன்
இ) ஐந்தாம் நிக்கோலஸ் ஈ) ஜான் குட்டன்பர்க்

58. 'நவீன அறிவியலின் தந்தை' என்று கருதப்படுபவர்
அ) டெக்கார்த்தே ஆ) பிரான்சிஸ் பேகன்
இ) நியூட்டன் ஈ) வெசாலியஸ்

59. ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபிளைக் கைப்பற்றிய ஆண்டு
அ) 1430 ஆ) 1447
இ) 1453 ஈ) 1482

60. பம்பாய் கழகத்தைத் தோற்றுவித்தவர்
அ) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
ஆ) கோபாலகிருஷ்ண கோகலே
இ) ஜோதிபா புலே
ஈ) தாதாபாய் நௌரோஜி

61. 'இந்தியாவின் பங்க்' என்று அழைக்கப்பட்டவர்
அ) ஏ.ஓ.ஹியூம் ஆ) நீதிபதி ரானடே
இ) சுரேந்திரநாத் பானர்ஜி ஈ) பக்ருதீன் தியாப்ஜி

62. தந்தை பெரியாரை 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' என்று பாராட்டியது யார்?
அ) காந்தி ஆ) ரவீந்திரநாத் தாகூர்
இ) யுனெஸ்கோ நிறுவனம் ஈ) ஐ.நா. சபை

63. அபினவ் பாரத் சங்கம் எங்கு தோற்றுவிக்கப்பட்டது?
அ) பீகார் ஆ) மேற்கு வங்காளம்
இ) மதராஸ் ஈ) மகாராஷ்டிரம்

64. 'பகிஷ்கிரித் ஹிட்காரினி சபை' என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர்
அ) பி.ஆர். அம்பேத்கர் ஆ) ஜோதிபா புலே
இ) நாராயண குரு ஈ) கேசவ் சந்திர சென்

65. 'சமுதாயத்தின் ஆணி வேர்' எனப்படுபவர்கள்
அ) ஆட்சியாளர்கள் ஆ) ஆசிரியர்கள்
இ) அரசியல்வாதிகள் ஈ) மக்களவை உறுப்பினர்கள்

66. நகராட்சித் தேர்தல்களை நடத்தும் அமைப்பு
அ) மாநிலத் தேர்தல் ஆணையம்
ஆ) மாவட்டத் தேர்தல் ஆணையம்
இ) இந்தியத் தேர்தல் ஆணையம்
ஈ) சட்டப்பேரவை

67. விதவைகள் மறுமணச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு
அ) 1838 ஆ) 1856
இ) 1890 ஈ) 1929

68. அரசின் முதல் அங்கம் எது?
அ) நிர்வாகத் துறை ஆ) சட்டமன்றம்
இ) நீதித்துறை ஈ) பத்திரிகைத் துறை

69. கீழ்க்கண்டவற்றில் வாயுக் கோள் எது?
அ) வியாழன் ஆ) வெள்ளி
இ) புதன் ஈ) செவ்வாய்

70. புவியின் சுழற்சி வேகம் ஒரு மணி நேரத்திற்கு எத்தனை கி.மீ?
அ) 800 கி.மீ ஆ) 1200 கி.மீ
இ) 1150 கி.மீ ஈ) 1670 கி.மீ

71. எந்த நிறத்தைக்கொண்ட பவளங்கள் விலையுயர்ந்ததாகக் கருதப்படுகின்றன?
அ) வெள்ளை ஆ) நீலம்
இ) பச்சை ஈ) சிவப்பு

72. மான்கொம்பு வடிவ வெண்மைப் பவளங்கள் எங்கு காணப்படுகின்றன?
அ) அந்தமான் நிக்கோபார் தீவுகள்
ஆ) லட்சத்தீவுகள்
இ) ராமேஸ்வரம்
ஈ) மன்னார் வளைகுடா

73. ஓர் இடத்தில் அழுத்தச் சரிவு குறைந்தால் காற்றின் வேகம்
அ) குறையும் ஆ) அதிகரிக்கும்
இ) இரு மடங்காகும் ஈ) பாதியாகும்

74. சாமுனாஸ் என்பது எந்தப் பகுதியில், புயலுக்கு வழங்கப்படும் பெயர்?
அ) இந்தியா ஆ) ஆஸ்திரேலியா
இ) அரேபியா ஈ) மேற்கு இந்தியத் தீவுகள்

75. ரஷ்யாவில் காணப்படும் புல்வெளி வகை
அ) ஸ்டெப்பி ஆ) பிரைரீஸ்
இ) பாம்பாஸ் ஈ) டவுன்ஸ்

76. 'துந்திரா' என்ற சொல்லின் பொருள்
அ) அதிகக் குளிர் நிலவும் இடம்
ஆ) அதிக வெப்பம் நிலவும் இடம்
இ) மிதமான குளிரும் மிதமான வெப்பமும் நிலவும் பகுதி
ஈ) மரங்கள் இல்லாத இடம்

77. டெத்திஸ் கடல் மறையும் நேரத்தில் உருவானதாக நம்பப்படும் மலை
அ) இமயமலை ஆ) ஆல்ப்ஸ் மலை
இ) விந்திய மலை ஈ) சாத்பூரா மலை

78. எரிமலையின் 'லாவா' பகுதியின் வெப்பநிலை சுமார்

www.LatestWalkin.com

அ) 500°C ஆ) 600°C
இ) 1000°C ஈ) 1100°C

79. சில பனியாற்று நிலவெளிகளில் மணலாலும் பரல்களாலும் ஆன நீண்ட குறுகலான தொடர்கள்
அ) ட்ரம்லின் ஆ) மொரைன்
இ) எஸ்கர்ஸ் ஈ) ஹார்ன்

80. கியூரோஷியா நீரோட்டம் காணப்படும் கடல் பகுதி
அ) வட பசிபிக் பெருங்கடல் ஆ) வட அட்லாண்டிக் பெருங்கடல்
இ) தென் பசிபிக் பெருங்கடல் ஈ) தென் அட்லாண்டிக் பெருங்கடல்

81. கீழ்க்கண்டவற்றில் ஒன்று புலிப் (Tiger economy) பொருளாதார நாடு அல்லாதது எது?
அ) தாய்லாந்து ஆ) மலேசியா
இ) இந்தியா ஈ) சிங்கப்பூர்

82. 'யாமம்' என்பது எந்த வகை திணையின் சிறு பொழுது?
அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) மருதம் ஈ) நெய்தல்

83. தமிழ்நாட்டில் உவர்மண் காணப்படும் பகுதி
அ) தஞ்சாவூர் ஆ) உடுமலை
இ) காஞ்சிபுரம் ஈ) வேதாரண்யம்

84. பொருளாதார வளர்ச்சி நிலைக் கோட்பாட்டை வகுத்தவர்
அ) ஜே.எம். கீன்சு ஆ) w.w. ரோஸ்டோவ்
இ) J.A. சும்பீட்டர் ஈ) ஆர்தர் லூயிஸ்

85. வளரும் நாடுகளுள் மக்கள் தொகைக் கொள்கையைச் செயல்படுத்திய முதல் நாடு
அ) இந்தியா ஆ) சீனா
இ) பாகிஸ்தான் ஈ) பங்களாதேஷ்

86. அனைத்துப் பொருளியல் வாழ்வும் திட்டமிடுதலை உட்படுத்தியதே என்று கூறியவர்
அ) ராபர்ட் மால்தஸ் ஆ) ஜே.எம். கீன்ஸ்
இ) குஸ்நெ ஈ) இலியன்ஸ் ராபின்ஸ்

87. பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1950 ஆ) 1960
இ) 1970 ஈ) 1980

88. தென் மேற்கு ஆப்ரிக்காவின் தற்போதைய பெயர்
அ) காங்கோ ஆ) ஜிம்பாப்வே
இ) நமீபியா ஈ) ஜாம்பியா

89. 'சிந்து நதியின் நன்கொடை' என்றழைக்கப்படும் நாடு
அ) இந்தியா ஆ) பாகிஸ்தான்
இ) சீனா ஈ) பங்களாதேஷ்

90. உலக நீரிழிவு நோய் அனுசரிக்கப்படும் நாள்?
அ) மே 31 ஆ) ஜூன் 5
இ) ஜூன் 27 ஈ) ஜூலை 11

91. ஃபோர்ப்ஸ் வெளியிட்ட உலகின் மிகச் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலில் முதலிடம் பெற்ற பெண்மணி
அ) மிச்சேல் ஆ) இந்திரா நூயி
இ) சாந்தா கொச்சார் ஈ) சோனியா காந்தி

92. 2010ம் ஆண்டு நோபல் இலக்கியத்திற்கான விருது வென்ற மரியோ வர்கஸ் லோசா எந்த நாட்டைச் சார்ந்தவர்?
அ) ஸ்பெயின் ஆ) மெக்ஸிகோ
இ) சீனா ஈ) பெரு

93. சமீபத்தில் தமிழகத்தின் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கரும்பு உற்பத்தியில் தமிழகம் எத்தனையாவது இடம் வகிப்பதாகக் கூறினார்?
அ) முதல் இடம் ஆ) 2வது இடம்
இ) 3வது இடம் ஈ) 4வது இடம்

94. சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டியில் எத்தனை இரட்டை சதங்களை எடுத்துள்ளார்?
அ) 5 ஆ) 6
இ) 7 ஈ) 8

95. உலக வங்கியின் நாளேடான 'எமர்ஜிங் மார்க்கெட்ஸ்' இந்த ஆண்டின் சிறந்த நிதியமைச்சர் விருதை எந்த நாட்டிற்கு வழங்கியது?
அ) இந்தியா ஆ) ஆஸ்திரேலியா
இ) அமெரிக்கா ஈ) சீனா

96. சர்வதேசப் பெண்கள் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர்
அ) வீனஸ் வில்லியம்ஸ் ஆ) செரீனா வில்லியம்ஸ்
இ) கிம் கிளைஸ்டர்ஸ் ஈ) மரியா ஷரபோவா

97. 2011ம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்தும் நாடு
அ) இந்தியா ஆ) இலங்கை
இ) பங்களாதேஷ் ஈ) இவை மூன்றும்

98. இந்தியாவிற்கு இதுவரை வருகை புரிந்துள்ள அமெரிக்க அதிபர்களின் எண்ணிக்கை
அ) 4 ஆ) 5
இ) 6 ஈ) 7

99. 'சர்வதேச சுதந்திர தினம்' கொண்டாடப்படும் நாள்
அ) நவம்பர் 7 ஆ) நவம்பர் 9
இ) நவம்பர் 14 ஈ) நவம்பர் 30

100. உலகின் குள்ளமான மனிதர் கஜேந்திர தாபா மகர் எந்த நாட்டைச் சார்ந்தவர்
அ) பாகிஸ்தான் ஆ) பூடான்
இ) சீனா ஈ) நேபாளம்

## விடைகள் :

1.அ), 2.இ), 3.இ), 4.ஆ), 5.அ), 6.இ), 7.ஈ), 8.ஈ), 9.இ), 10.ஆ), 11.ஆ), 12.அ), 13.ஈ), 14.ஆ), 15.ஈ), 16.அ), 17.ஆ), 18.அ), 19.ஈ), 20.அ), 21.இ), 22.அ), 23.ஆ), 24.ஈ), 25.ஈ), 26.ஆ), 27.இ), 28.அ), 29.ஆ), 30.இ), 31.ஈ), 32.அ), 33.ஈ), 34.ஆ), 35.இ), 36.ஈ), 37.இ), 38.அ), 39.ஆ), 40.ஈ), 41.இ), 42.இ), 43.ஆ), 44.அ), 45.ஈ), 46.இ), 47.ஈ), 48.ஆ), 49.இ), 50.ஈ), 51.அ), 52.ஆ), 53.அ), 54.இ), 55.இ), 56.அ), 57.ஈ), 58.ஆ), 59.இ), 60.ஈ), 61.இ), 62.இ), 63.ஈ), 64.அ), 65.ஆ), 66.இ), 67.ஆ), 68.அ), 69.அ), 70.ஈ), 71.ஈ), 72.இ), 73.அ), 74.இ), 75.அ), 76.ஈ), 77.ஆ), 78.ஈ), 79.இ), 80.அ), 81.இ), 82.அ), 83.ஈ), 84.ஆ), 85.அ), 86.ஈ), 87.ஆ), 88.இ), 89.ஆ), 90.இ), 91.அ), 92.ஈ), 93.இ), 94.ஆ), 95.அ), 96.இ), 97.ஈ), 98.இ), 99.ஆ), 100.ஈ).